கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருடம் /முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித்தேர்வு **2014/2015**

**(October/November 2016)**

## ECS 2123 Intermediate Macroeconomics

நரம்: 03 மணித்தியாலங்கள்

குதி ஒன்றில் இரண்டு வினாக்களுக்கும், பகுதி இரண்டில் மூன்று வினாக்களுக்கும் ல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடைதருக.

---

பகுதி I

அ வருமான வட்டப்பாய்ச்சல் என்ற எண்ணக்கருவை நான்குதுறை மாதிரியொன்றை அடிப்படையாகக்கொண்டு சுற்றோட்டப்படத்தில் விளக்குக.

(08 புள்ளிகள்)

ஆ தேசியவருமானக் கணிப்பீட்டின் பயன்பாடுகளையும் குறைபாடுகளையும் விமர்சன ரீதியாக ஆராய்க.

(06 புள்ளிகள்)

இ சேமிப்பின் பல்வேறுபட்ட வகைகளையும் அவை கணிக்கப்படும் முறைகளையும் சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

அ சேயின் சந்தைவிதியினை விளக்கி, அதன் பிரதான எடுகோள்களை பட்டியலிடுக.

(05 புள்ளிகள்)

ஆ செயற்திறனான மொத்தக்கேள்வி என்பதை விளக்கி,அதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

இ பெருக்கிக் கோட்பாட்டின் எடுகோள்கள் 4 குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

ஈ கெயின்சினது நான்குதுறை மாதிரியொன்றின் சமநிலையில் தன்னிச்சையான வரியிலும் தூண்டப்பட்டவரியிலும் ஏற்படும் மாற்றங்கள் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை விளக்குக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03 அ கெயின்சின் மொத்தக்கேள்வி என்பதை அடையாளப்படுத்தி, அதன் கூறுகளை விளக்குக.

(05 புள்ளிகள்)

ஆ கெயின்சினது மூடிய மூன்றுதுறை மாதிரியொன்றின் தரவுகள் வருமாறு. (தொகைகள் மில்லியன் ரூபாவில்.)

நுகர்வுச்சார்பு 100 + 0.8YD

முதலீடு 50

அரசகொள்வனவு 20

வரிச்சார்பு 10+0.1Y

i. முதலீட்டுப் பெருக்கியின் பெறுமதியாது?

(03 புள்ளிகள்)

ii. வரிப்பெருக்கியின் பெறுமதி யாது?

(03 புள்ளிகள்)

iii. மாற்றல்ப்பெருக்கியின் பெறுமதியாது?

(03 புள்ளிகள்)

iv. இப்பொருளாதாரத்தில் தன்னிச்சையான செலவீடு 1000 மில்.ரூபாவாயின் சமநிலைவருமானம் யாது?

(03 புள்ளிகள்)

v. வரி 50 மில்லியன் ரூபாவால் குறைந்தால் சமநிலைவருமானத்தில் ஏற்படும் மாற்றம் யாது?

(03 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

## பகுதி II

04 அ கெயின்சின் முழுவருமானக்கருதுகோளை சிறப்பியல்புகளை விளக்குக.

(08 புள்ளிகள்)

ஆ சார்புவருமானக் கருதுகோளின் அடிப்படையில் காட்சிவிளைவு தடுப்புவிளைவு என்பவற்றை வேறுபடுத்திவிளக்குக.

(06 புள்ளிகள்)

இ நபரொருவர் 25 வயதில் வேலைசெய்யத்தொடங்கி 65 வயதில் இளைப்பாறுகிறார். மேலும் 80 வயதில் இறக்கிறார். இவரது வருடவருமானம் 150,000/- ஆகும். வாழ்க்கைவட்டக்கருதுகோளின் அடிப்படையில் இந்நுகர்வோனது நுகர்வு மற்றும் சேமிப்பு அளவுகளைக் கணிப்பிடுக.

(06 புள்ளிகள்

(மொத்தம் 20 புள்ளிகள்

அ முதலீடு என்பதை வரையறுத்து, அதன் வகைகள் மற்றும் அதனைத் தீர்மானிக்கும் காரணிகளைப் பட்டியலிட்டு விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ வர்த்தகசகட ஓட்டம் என்பதை அடையாளப்படுத்தி, அதன் நான்கு கூறுகளையும் வேறுபடுத்தி விளக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

அ IS, LM வளைகோடுகளை வரைவிலக்கணப்படுத்தி அவற்றின் பண்புகளை பட்டியலிடுக.

(5 புள்ளிகள்)

இ பொருளாதாரமொன்றின் தரவுகள் வருமாறு,

C= 100+0.8Yd, I= 150-6i, T= 0.25Y, G=100, L= 0.2Y-2i, M=150

i. IS சமன்பாட்டைப் பெறுக.

(03 புள்ளிகள்)

ii LM சமன்பாட்டைப் பெறுக.

(03 புள்ளிகள்)

iii. பேரினப்பொருளாதார சமநிலை வட்டிவீதம் மற்றும் வருமானமட்டம் என்பவற்றைக் காண்க.

(03 புள்ளிகள்)

iv. முதலீடு 100 மில்லியன் ரூபாவால் அதிகரித்தால் புதிய IS சமன்பாடு யாது.

(03 புள்ளிகள்)

v. புதிய பேரினப்பொருளாதார சமநிலை வட்டிவீதம் மற்றும் வருமானமட்டம் என்பவற்றைக் காண்க.

(03 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

07. பழம்பொருளியலாளரின் வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு நிர்ணய மாதிரியை கெயின்சிய வருமானநிர்ணயிப்பு மாதிரியோடு ஒப்பிட்டு வேறுபடுத்துக.

(மொத்தம் 20 புள்ளிகள்)